ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

**03.09.2026**

1. மனமே என்னுள் கலந்திரு
மனமே யானாய் நிறைந்திரு
ஞானமாய் அரங்கன் யான் அருளும்
நன்னெறி வழி தொண்டர்கள் வருக

2. வருகவே உங்களுள் நீக்கமற
வடிவேலனும் யானும் கலந்து
தருவோம் சகல வரங்களும்
தக்க பராபவ யாளி திங்கள்

3. திங்களிலே சூல குருவார அருளாசி
தொண்டர்கள் உயர்வுபெற உரைப்பேன்
ஓங்காரக் குடில் நோக்கி வந்து
ஓங்கார ஞான ஜோதி வணங்கி

4. வணங்கியே என் வழி வருபவர்க்கு
வல்லமை தந்து உடனிருப்பேன்
இணங்கி சைவநெறி ஏற்று
என் தருமம் தனை கடமையாக

5. ஆகவே சேவை கலந்து ஆற்ற
அன்னதான மகா சேவையை
செகமே பின்பற்றும் வண்ணம்
செயல்பாடுகளை சரணாகதிபட செய்ய

6. செய்யவே நன்மைகள் கூடி
செய்பவரும் செயல்வழி உதவி
அய்யமற பொருளுதவி படவே
ஆதரவு தருகின்ற அனைவரும்

7. அனைவரும் வேண்டும் வரம்
அரங்கன் என்னால் அடைவது உறுதி
துணையாக யாமிருந்து வர
தொண்டர்கட்கு என்ன சோர்வு அப்பா

8. அப்பனே அனைத்தும் அகற்றி
ஆக்கம் ஊக்கமளித்துமே

காப்பாக அவரவர் தேவைகள்
கடமைகள் நிறைவேற அருள்வேன்

9. அருள்வேன் ஞானபலமாக
அருள்வேன் ஆசானுமாக
அருள்வேன் கடைத்தேற்றம் பெற
அடியவர்கள் என சேர்ந்தவருடன்

10. சேர்ந்தவருடன் அவர் குடிகட்கும்
சுற்றம் தனக்கும் பாதுகாப்பு தனை
நேர்த்தியாய் தந்தருள் புரிவேன்
நிலவுலகில் ஞானிகள் பூசை

11. பூசைவழி புண்ணிய வழியென
பூவுலக மக்கள் என் வழிவர
ஆசாபாசம் கடந்து பிறவி நோக்கம்
அடைந்துமே ஞானிகளாவர்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி